REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: சித்திரை 24உ திங்கள் (6—5—57) ★ வெளியூர்: சித்திரை 25உ செவ்வாய் (7—5—57) இதழ் [280

குறுகியமனம் கொண்டவரல்லர்!

★

"சிலர் கூறுவதுபோல, தமிழர்கள், குறுகியமனம் படைத்தவர்கள் அல்லர்! அவர்கள் பரந்தமனம் படைத்தவர்கள் என்பதை, நாம் ஒரு மலையாளியை கவர்னராகவும், ஒரு கன்னடவரை சட்டசபைத் தலைவராகவும், ஒரு தெலுங்கரை உதவித் தலைவராகவும் ஏற்றுக்கொண்டிருப்பதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்"

—சென்னை சட்டசபையில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி

சட்ட சபையில் கழக இலட்சிய முழக்கம்

மக்களின் குரலை எதிரொலிக்கின்றனர் கழக எம். எல். ஏ.-க்கள்

காங்கிரசாரின் பதில்கூறும் முயற்சி தோல்வி!

கடந்த வெள்ளியன்று மாலையும், சனியன்றும் சட்டசபையில் கவர்னர் உரைமீது நடைபெற்ற விவாதத்தில் நமது கழக எம். எல். ஏ.-க்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அன்பழகன், எம். செல்வராஜ், சத்தியவாணிமுத்து, மு. கருணாநிதி, ப. உ. சண்முகம், எஸ். எம். அண்ணாமலை ஆகியோர் கலந்துகொண்டனர்.

நமது எம். எல். ஏ.-க்கள், தமிழகத்தின் இன்றைய பிரச்சினைகளை எடுத்துரைத்ததுடன், பிரச்சினைகளுக்கான உருப்படியான பரிகாரங்களையும் முன்வைத்தனர்.

கழகத்தின் மூலாதார இலட்சியம் இழையோட, பிரச்சினைகளை அவர்கள் அலசிக்காட்டினர்.

அவர்களது கருத்துக்கள் தமிழக மக்களின் விருப்பங்களையும் எண்ணங்களையும் எதிரொலிப்பனவாக அமைந்திருந்தன.

பாராளுமன்ற ஜனநாயகத்தில் பண்பட்டவர்கள்—பழக்கப்பட்டவர்கள் என்று கூறப்படும் உறுப்பினர்களைவிட, அனுபவமில்லாதவர்கள் என்று குறைத்துப் பேசப்பட்ட நமது உறுப்பினர்கள், கருத்துக்களைத் தரமாகவும் சரளமாகவும் எடுத்துரைத்து பலரின் பாராட்டுதலையும் பெற்றனர்.

காங்கிரஸ் உறுப்பினர்கள் பலரும், நமது உறுப்பினர்கள் எழுப்பிய விவகாரங்களுக்குப் பதில்கூற முனைந்து தோல்வியே கண்டனர்.

தோழர் மு. கருணாநிதி அவர்களும் தோழியர் சத்தியவாணி முத்து அவர்களும் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது. மற்ற தி. மு. கழக உறுப்பினர்கள் ஆற்றிய உரை தொடர்ந்து வெளிவரும்.

குண்டாவும் அண்டாவும்!

சென்னை, மே 6—

காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் சட்டசபையில் அடுக்குச் சொல் பேசுவதாக நினைத்து உளறிவழிந்தார்!

தேனி தொகுதி காங்கிரஸ் உறுப்பினரான என். ஆர். தியாகராசன் நேற்று முன்தினம் சட்டசபையில் கவர்னர் உரை மீது பேசும்போது, 'நிதி மந்திரி தொகுதியில் 'குண்டா' தொழில் கொழிக்கிறது; எனது தொகுதியில் ஒரு 'அண்டா' தொழிலாவது வேண்டாமா,' என்று கேட்டபோது, கேலிச் சிரிப்பு சபையை நிறைத்தது!

பட்ட கதை பழைய கதை!

சென்னை, மே 6—

சட்டசபையில் பட்ட கதையையும், பழைய கதையையும் ஒரு உறுப்பினர், செல்லமாகக் கடிந்தார்!

துரைசாமி ரெட்டியார் என்ற கா. சீ. க. உறுப்பினர், நேற்று முன்தினம் பேசுகையில், "இங்கு நான்கு பெண்கள் பேசினார்கள்; மணிமணியாக இருந்தது அவர்கள் பேச்சு! ஆனால், இதர உறுப்பினர்கள் பேசுகையில், பட்ட கதை—பழைய கதை எல்லாம் பேசினார்கள்; என்னமோ, எனக்கு அது நல்லதாகப்படவில்லை! இங்கு யார்தான் அக்கினி சாட்சியாகச் சொல்லுவார்கள் — 'ஒன்பதாயிரத்திற்கும் அதிகமாக தேர்தலுக்காகச் செலவிடவில்லை' என்று! கூறுவார்களா? சபாநாயகர் உட்படக் கூறமாட்டார்கள்" என்று கூறினார்.

சபை, அவர் பேசிய விதம் கேட்டு சிரித்து மகிழ்ந்தது!

சர்க்காரின் சேரி அபிவிருத்தி திட்டங்களின் இலட்சணம்!

ஆண்டுதோறும் எண்ணிக்கை அதிகரிப்பதைச் சுட்டிக்காட்டுகிறார் சத்தியவாணிமுத்து

தமிழில் ஏன் கவர்னர் உரை நிகழ்த்தக் கூடாது?

"எங்களது நோக்கம் சரியோ தவறோ, நாங்கள் எங்களுக்குச் சரியெனப்பட்டதை இங்கு எடுத்துரைக்க, எதிர்க்கட்சி என்ற முறையில் கடமையும் உரிமையும் உடையவர்கள்.

"கவர்னர் தமது உரையினை ஆங்கிலத்தில் நிகழ்த்தியிருக்கிறார்.

இந்த அவலநிலை ஏன்?

"என்றுமே வடநாடு செல்வதற்கு வாய்ப்பற்ற தமிழ் நாட்டின் சின்னஞ்சிறு குழந்தைகளும் இந்தி கற்றுக்கொள்ளவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படும்போது, தமிழ் நாட்டில் வந்துள்ள கவர்னர் தமிழில்தான் பேசவேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்படாதது ஏன் என்று தெரியவில்லை? கனம் சபைத் தலைவர் அவர்கள்கூட, நல்ல தமிழ் பேசத் தெரியாவிட்டாலும், கொச்சைத் தமிழிலேனும் பேசுவதைப்போல, இனியேனும் கவர்னர் அவர்கள் தமிழில் பேசினால் நல்லது; பேசவேண்டும்.

"தமிழர்கள் அனைவரும் ஒரு மனதோடு விரும்பிய தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள், தமிழ் நாட்டிற்குக் கிடைக்காதது குறித்து கவர்னர் தனது உரையில் வருத்தந்தெரிவிக்கவில்லை.

வெட்கப்படுவானேன்?

"இன்று, தமிழாது பண்பாடு—மேன்மை இவை குறித்து, தங்களுக்கும் கவலை உண்டெனப் பேசும் ஆட்சியாளர்கள், 'நயா பைசா' என்ற இந்திச் சொல்லை ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும்? 'புதிய காசு' என்று தமிழில் மொழி பெயர்த்து வழங்க ஏன் வெட்கப்படவேண்டும்?

மின்சார வசதி இலட்சணம் இதுதானா?

"மின்சார உற்பத்தி பெருகியிருப்பதாகவும், கிராமங்களுக்கெல்லாம் மின்சார வசதி கிடைப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால், கடமை வழுவாது காரியங்களைத் திறம்படச் செய்யும் போலீசார் வாழும் வீடுகளுக்கு சென்னை போன்ற நகரங்களில் கூட இன்னும் மின்சார வசதி தரப்படவில்லை என்பதைக் கூறாமல் இருக்கமுடியாது.

தாய்மார்கள் படும் அவதியான காட்சி!

"கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் விளைச்சல் அதிகரித்திருப்பதாகக் கூறுகிறார்கள்; விளைச்சல் அதிகரித்திருந்தும் விலைவாசிகள் இறங்கவில்லை என்று வேறு கூறுகிறார்கள். இது எப்படி என்பது எனக்குப் புரியவில்லை. விளைச்சல் அதிகரித்திருந்தால், உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கவேண்டும்; அவற்றின் விலையும் நியாயமாகக் குறைந்திருக்கவேண்டும். ஆனால், இன்னும் சென்னையில் தாய்மார்கள், கொளுத்தும் வெயிலில், உணவுப் பொருள் வாங்குவதற்காக 'கியூ' வரிசையில் காத்திருக்கின்றனர். மேலும், விலைகள் இறங்கவில்லை என்பதை கவர்னரே ஒப்புக்கொண்டிருக்கிறார். கனம் மந்திரிமார்கள் தங்களின் நீண்டகாலச் சுற்றுப்பயணங்களை கொஞ்சம் ஒதுக்கிவைத்துவிட்டு, என்னுடன் ஒருநாளைக்கு வந்தால், தாய்மார்கள், அரிசி வாங்கப் படாதபாடுபடும் காட்சியை நான் காட்ட முடியும். இப்படி விசித்திரமானதோர் நிலை நிலவுகிறது, நாட்டில்!

அடிமை நிலைதானே!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் கோரிய

(4-ம் பக்கம் பார்க்க)

'இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்'

குறள் நெறி மேற்கோள் காட்டி கருணாநிதி குரலோசை!

நியாயவாரச் சட்டங்களால் பாட்டாளிகள் படும் அவதி குறித்து விளக்கம்

"இந்த சர்க்கார் செய்யத் தவறியவற்றையும், மக்களுக்குள்ள குறைகளையும் எடுத்துச் சொல்லவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். சர்க்கார் செய்திருப்பதாகச் சொல்லப்படும் காரியங்களைப் பன்னிப்பன்னிச் சொல்லிப் பாராட்டு விழா நடத்துவதற்காக அல்ல, நாங்கள் சட்டசபைக்கு வந்திருப்பது!

"அத்தகைய பாராட்டினை, சர்க்கார் மெய்த காரியங்களால் பயன் பெற்றவர்கள் இந்தச் சபைக்கு வெளியே நடத்துவார்கள்; அந்த விழாக்களில் கலந்துகொண்டு சர்க்கார் பிரதிநிதிகள் மகிழட்டும். நாங்கள் இங்கே குறைகளை எடுத்துரைக்கவே வந்திருக்கிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால்!

"ஒருகாலத்தில் மன்னர்கள், இரவு நேரங்களில் மாறுவேடம் தரித்து, ஊரை வலம் வந்து மக்களின் குறைகளை அறிந்து, கொலு மண்டபத்திலிருந்து அக்குறைகளைப் போக்கினார்கள் என்று நாம் படித்திருக்கிறோம்; அது மன்னர்கள் காலம்! ஆனால் இப்போது மந்திரிமார்கள் ஆட்சி செய்கிறார்கள். இந்த மந்திரிமார்களுக்கு, மக்களின் குறையை மாறுவேடமணிந்து அறிய முடியாது. ஒருக்கால், நாடகத்தில் வேடம் போட்டுப் பழக்கப்பட்ட நாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஒருவேளை, அப்படி மாறுவேடம் பூண்டு மக்களின் குறைகளை அறிய முடியும்.

ஏதையும் எதிர்ப்பதல்ல எங்கள் இலட்சியம்!

"எதிர்க் கட்சி என்றால், சர்க்கார் செய்யும் எதையும் நாங்கள் எதிர்த்துக்கொண்டேஇருப்போம் என்பதல்ல; சர்க்கார் செய்யத் தவறியவற்றை எடுத்துரைப்பவர்களாக இருப்போம்.

யாத்துக் கொடுத்த இலக்கணம்

"ஆளுகிறவர்கள் யாரைத் துணைகொள்ள வேண்டும் என்று, வள்ளுவர் இலக்கணம் யாத்துக் கொடுத்திருக்கிறார்? 'பெரியாரைத் துணைகோடல் வேண்டும்' என்று கூறியிருக்கிறார், வள்ளுவர். 'பெரியாரை' என்றால், எதைச் சொன்னாலும் 'ஆமாம்' என்று சொல்லுகிற பெரியாரை அல்ல! இடித்துரைக்கிற பெரியார்களைத் துணைக்கோடல் வேண்டும் என்று கூறியிருக்கிறார் வள்ளுவர்.

இடித்துரைப்போம்!

"'இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன், கெடுப்பா ரிலானுங் கெடும்' என்பது குறள். இடித்துரைப்போரே இல்லாத காவலற்ற அரசன், தனக்குப் பகைவர் இல்லையாயினும் தானே கெடுவான் என்பது அதன் பொருள்! இடித்துரைக்கிற பெரியவர்களை சர்க்கார் துணைகொள்ளவேண்டும் என்பது கருத்து! அத்தகைய இடித்துரைப்பவர்களாகத்தான் நாங்கள் இருக்கவிரும்புகிறோம்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—5—57 திங்கள்

இதுதான் முக்கியமா?

புனிதர் புத்தர் தோன்றி இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் முடிந்துவிட்டன. அதற்கான விழா சென்ற ஆண்டு இந்தியத் துணைக்கண்டம் முழுதிலும் மிக மிகப் பகட்டாகக் கொண்டாடப் பட்டுள்ளது.

சிறப்பாகக் கொண்டாடப் பட்ட அவ்வாண்டுக் காலம் முடிந்து ஓராண்டு ஆகிறது. அவ்வோராண்டின் அடையாளமாக இலங்கை விழா கொண்டாட இருக்கிறது. அவ்விழாவின் இறுதி, இந்தியப் பிரதமர் நேருவின் பஞ்சசிலப் பேச்சுடன் முடிவடைய இருக்கிறது. எனவே, நேரு இலங்கைத் தீவு செல்ல இருக்கின்றார், அந்நாட்டு அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்க.

இந்தியப் பிரதமரின் விருப்பமான பணிகளில், பஞ்சசிலம் பற்றி சொற்பொழிவாற்றுவதும், அறநெறி சாரத்தை விரித்துரைப்பதும், அந்த சன்மார்க்கத்தைச் சொல்லிச் சொல்லி பூரிப்பதும், கொல்லாமையைக் கூறிக் கூறி மகிழ்வதும் தலை சிறந்த பணிகளாகும் என்பதை உலகம் அறிந்தே இருக்கின்றது. அவை பற்றி எல்லாம் தெள்ளத் தெளிய எடுத்துக் கூறி விளக்கம் அளிப்பதில்பண்டிதருக்குள்ள அலாதி ஆற்றலை ஐயுறுவோர் உலகத்தில் எவரும் கிடையாது.

உலகத்திற்குப் பஞ்சசிலம் போதித்து வருகின்ற காரணத்தினாலேயே, 'பஞ்சசில பண்டிதர்' என்ற சிறப்புப் பெயருக்கும் அவர் உரியவராக இருந்துவருகிறார். அவ்வாறு அவர் புரிந்து வரும் பஞ்சசிலப் பிரசாரத்தின் காரணமாக, அவருக்குத் தனிப் புகழ் கிடைத்திருக்கின்ற அளவிற்கு, அக்கோட்பாடுகளுக்கு உலகப் பேரரசு—சிற்றரசுகளிடை நல்லாதரவு கிடைத்திருப்பதாகச் சொல்லிவிடுவதற்கில்லை.

பண்டிதரின் பஞ்சசிலக் கோட்பாடுகளைப் பின்பற்றி, பிறநாடுகளுடன் தாம் தாம் வைத்துக்கொள்ளவேண்டிய அரசியல் உறவுமுறைகளை பேரரசுகளும் சிற்றரசுகளும் எந்த அளவு புதிதாக செப்பனிட்டுக் கொண்டுள்ளன அல்லது முனைந்துள்ளன என்பது சிந்திக்கத்தக்கது. அவ்வாறு சிந்திக்கும் பட்சத்தில், தாம் பேசிவரும் பஞ்சசிலக் கருத்தின்படி தமது அரசியல் செயல் முறையை அமைத்துக் கொள்ளுவதில், இந்தியப் பிரதமர் நேருவுங்கூட எங்கோ பின்தங்கிக் கிடக்கிறார் என்ற முடிவிற்குத்தான் எவரும் வந்தாக வேண்டும்.

பஞ்சசிலக் கோட்பாட்டில் புதுமை எதுவும் கிடையாது. ஆயுத பலத்தில் நம்பிக்கைக் கொண்டிருந்த சாம்ராச்சியங்கள் அனைத்தும், அமைதியாக இருந்த காலத்தில் எல்லாம் இந்த பஞ்சசிலக் கருத்தைக் கூறித்தான் உள்ளன. அதே போன்று, அணு ஆயுதங்களைக் கையடக்கமாக வைத்துக் கொண்டுள்ள இன்றைய வல்லரசுகளும், உருட்டி மிரட்டிப் பேச வாய்ப்பு கிடைக்காத நேரத்தில் எல்லாம், நம்பிக்கை இருந்தாலும் இல்லாமற் போனாலும், பஞ்சசிலம்பேசி வருவதையும், அதற்குப் புதிய செலாவணி மதிப்பைத் தேடித்தர முன்வந்துள்ள இந்தியப் பிரதமரைப் பாராட்டிப் புகழ்வதையும், நாம் நித்திய நாதமாகக் கேட்டு வருகின்றோம்.

ஒருவர் ஒருவருக்கிடை ஏற்படுகின்ற சிக்கலைத் தீர்த்து வைக்கவும், நல்லுறவை வளர்த்து வரவும் பயங்கர அழிவுப் பொருட்களான அணு குண்டுகளால்தான் இயலக் கூடும் எனத் தாங்கள் கொண்டுள்ள திடமான நம்பிக்கையை, வெளிப்படையாக வாய்விட்டுக் கூறுவதில்லையானாலும், தம் தம் செயல் மூலம் மெய்ப்பித்து வருகின்றன வல்லரசுகள். அதே நேரத்தில், தங்களுக்கு பஞ்சசிலத்தின் பேரில் நம்பிக்கை இருப்பதாகவும் அதே பேரரசுகள் பறைசாற்றியும் வருகின்றன. இந்தப் பொதுநிலைக்கு, இந்தியப் பேரரசும் கட்டுப்பட்டே செயல்பட்டு வருகிறது. முரண்பாடுடையது—அரசியலில் விசித்திரமானது.

பண்டிதரின் பஞ்சசிலக் கோட்பாட்டில் நம்பிக்கை இருப்பதாக, இந்தியப் பேரரசும்—சிங்கள அரசும் ஏற்கனவே வெளிப்படையான அறிக்கை மூலம் ஒப்பியுள்ளன. ஆனால் அப்பஞ்சசில உணர்வுடன், தமக்கிடையில் இருந்து வரும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள, இரு அரசுகளும் முனையவில்லை — பிரச்சினையில் முடிந்த வெற்றி பெறவும் இல்லை.

எத்தனையோ ஆண்டுக்காலத்திற்கு முன் சிங்களத் தீவில் குடியேற்றப்பட்ட இந்தியத் தமிழ் மக்களின் சந்ததியினர் இலட்சக்கணக்கில் இன்று, அங்குள்ள சிங்கள ஆட்சியினரால் அல்லலுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். அம் மக்கள் உரிமை இழந்து உழைக்கும் இயந்திரங்களாக ஆக்கப் பட்டுள்ளனர் இலங்கை ஆட்சியினரால்.

ஏறத்தாழ பத்தாண்டுக் காலமாக, இக்கொடுந்துன்பத்திற்கு பலியாகி பாதகித்துக் கிடக்கின்றனர் அம்மக்கள். அவர்கள் உரிமையை பறித்து, அவர்களுக்குத் தொல்லைக்குமேல் தொல்லையைத் தந்துக்கொண்டிருப்பது சிங்கள ஆட்சியாகும்.

அவ்வாறு இலட்சக்கணக்கான இந்தியத் தமிழ் மரபினரை அலக்கழித்துவரும் சிங்கள ஆட்சியோ, சமதர்மம் பேசுகிறது—புத்த தர்மத்தைப் பின்பற்றி வருவதாகப் பறைசாற்றி வருகிறது—அனைத்துக்கும் மேலாக பண்டிதரின் பஞ்சசிலக் கருத்துக்கு உடன்பாடு தெரிவிக்கிறது.

சமதர்மம்—புத்த தர்மம்—பண்டிதரின் பஞ்சசிலம்—சிங்களப் பிரதமர் பண்டாவின் உதட்டளவில் களியாட்டம் போடுகிறது; ஆனால் அவர் உள்ளமோ இலட்சக்கணக்கான தமிழ் மக்களை வாட்டிவதைப் பதில் இன்பம் காண்கிறது!

அதேபோன்று பஞ்சசிலத் தூதுவரான இந்தியப் பிரதமர் பண்டிதரும் உலக அமைதி—புத்த அறம்—பஞ்சசிலம்—என்றெல்லாம் இடைவிடாது பேசி வருகிறார்; ஆனால் அல்லல்பட்டுவரும் இலங்கை வாழ் இந்தியத் தமிழ் மரபினர் துன்பம் துடைப்பதில், கவலையற்றுக் காலங் கழித்து வருகிறார். அது மட்டுமல்ல; தமிழ் மக்களுக்கு பண்டா தரும் துன்பத்துக்குத் துணையும் போகிறார்!

பஞ்சசிலம் பேசிடும் பண்டிதரும், அதற்கு உடன்படுவதாகக் கூறியுள்ள பண்டாவும் கூட்டாகச் சேர்ந்து இலங்கைத் தீவில் வாழ்ந்து வரும் இலட்சக்கணக்கான இந்தியத் தமிழ் மரபினரை, 'நாடற்ற நாடோடி'களாக ஆக்கி உள்ளனர். பஞ்சசிலம் பேசுகின்றார்கள்—அதேநேரத்தில் மக்கள் இனத்தின் ஒருசிறு பகுதியை அறைகுறை மக்களாக மாற்றி அமைத்துள்ளனர்!

இது முக்கியமான பிரச்சினை: உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை.

ஆனால் பண்டிதரோ, புத்தர் விழாவில் கலந்து கொள்ள இலங்கை செல்லுகிறார். அதற்கு பண்டாவின் அன்பழைப்பு கிடைத்துவிட்டிருக்கிறது.

'துணை முதலமைச்சர் தேவையில்லை'

'கையில் ஆறாவது விரலை விரும்புவது போலாகும்'

ஐதராபாத், மே 5—

"முதலமைச்சருக்கு உதவியாகத் துணை அமைச்சரை நியமித்துக் கொள்வது பயனற்றது; இது, கைக்கு ஆறாவது விரலை விரும்புவது போலாகும்" என்று, தெலிங்கானா பகுதி அமைச்சர் கூறியதை, ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவிக்கு சுட்டிக்காட்டியபோது, இந்தியாவின் எந்தப் பகுதியிலும் உதவி முதலமைச்சர் என்ற பதவி இல்லை என்பதை எடுத்துக்காட்டியதுடன், 'கையில் எனக்கு ஐந்து விரல்களே போதுமானது; ஆறாவது விரல் தேவையில்லை,' என்று பதிலளித்துள்ளார்.

பத்திரிகைத் தொழிலில் கூட்டுறவு முறை

மந்தியப் பேரரசின் அமைச்சரிடம் எழுத்தாளர்கள் வேண்டுகோள்

ஆமதாபாத், மே 5—

'பத்திரிகைத் துறையில், நடத்த இயலாமல் மூடப்பட்டும், 'ஜப்தி' செய்யப்பட்டும், தீர்த்துக் கட்டும் நிலையிலும் உள்ள பத்திரிகைகளை ஏற்றுக்கொண்டு, கூட்டுறவு முறையில் அதை இயங்கச் செய்ய மத்திய அரசாங்கம் முன் வரவேண்டும்' என்று, மத்திய அமைச்சர் நந்தாவிடம், குசராத் பத்திரிகையாளர்கள் முறையிட்டுள்ளனர்.

தென் மண்டலக் குழு

சென்னை, மே 5—

தென் மண்டலக் குழு இங்கு ஜூன் மாதம் கூடுமென்று தெரிகிறது.

சென்னை, ஆந்திரம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களும் தென் மண்டலக் குழுவில் இடம் பெற்றுள்ளன.

மாநிலங்களுக்கிடையே நீர்ப்பாசனம், மின்சாரம், போக்குவரத்து முதலியவைகளைப்பற்றி முதல் கூட்டத்தில் பேசப்படுமாம்.

எல்லைப் பிரச்சினை பற்றி விவாதித்து முடிவு காணப்படுமா என்று தெரியவில்லை.

வேலையின்றித் தவித்த விவசாயிகள் வேதனை

நெற்களஞ்சியத்தைக் கொள்ளையடித்தனராம்

பாட்னா, மே 5—

பஞ்சத்தினாலும், வேலையில்லா கொடுமையினாலும் வேதனையுற்ற 30 விவசாயிகள் நெறி தவறிய செய்கையில் ஈடுபட்டுக் கைதாகியுள்ளனர்.

ரூ. 10,000 மதிப்புள்ள 200 மணங்கு உணவுப் பொருள்களை அவர்கள் கொள்ளையடித்துள்ளனர். இது ஒரு பெரிய வியாபாரிக்குச் சொந்தமானது. தகவல் கிடைத்தவுடன் போலீசார் விரைந்து சென்று 30 விவசாயிகளையும் சிறைப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் பாட்னா பகுதியில், பூர்ணியா மாவட்டத்தில் நடைபெற்றுள்ளது.

பிராவிடண்ட்நிதி திட்டம்

வட்டி உயர்த்தப்படுகிறது

புதுடில்லி, மே 5—

1957—58-ம் ஆண்டில் பிராவிடண்ட் நிதித் திட்டத்தில் சேர்ந்துள்ள ஊழியர்களுக்கு வட்டித் தொகையை 3½ சதவிகிதத்திலிருந்து 3¾ சதவிகிதமாக உயர்த்தலாமென மத்தியத் தொழிலாளர் நல இலாகா அனுமதித்திருக்கிறது.

இந்தத் திட்டம் 1952-ல் அமுலுக்கு வந்தது; 4,500 தொழிற்சாலைகளில் உள்ள 20 இலட்சம் தொழிலாளர்கள் இதன் அனுகூலத்தைப் பெறுகின்றனர். இந்த நிதியில் ரூ. 75 கோடி சேர்ந்துள்ளது.

தொழிலாளர் குடியிருப்பு வசதித் திட்டம்

ஒதுக்கப்பட்ட தொகை பற்றி ஒரு புள்ளி விவரம்

புதுடில்லி, மே. 2—

சர்க்கார் உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தின் கீழ், 1957 மார்ச் 31-ந் தேதி வரை, இந்தியாவில் மாநில சர்க்கார்களும், தனிப்பட்ட தொழில் நிறுவனங்களும், கார்ப்பரேஷன்'களும் மொத்தம் 54,000 வீடுகளைக் கட்டியுள்ளனவாம்!

தமிழ் நாடு சர்க்காருக்கு 936 வீடுகளைக் கட்டுவதற்கு நிதி உதவியளிக்கப்பட்டது; அவர்கள் அதில் மொத்தம் 886 வீடுகளைக் கட்டியுள்ளதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள தொழிலதிபர்களுக்கு 762 வீடுகளைக் கட்டுவதற்கு நிதி உதவி வழங்கப்பட்டது, ஆனால் அவர்கள் 488 வீடுகளைத்தான் கட்டியுள்ளனராம்.

தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு 144 வீடுகளைக் கட்டுவதற்காக நிதி உதவி வழங்கப்பட்டதாம்; ஆனால், வீடுகள் எதையும் அவைகள் இன்னும் கட்டவில்லையாம்!

இந்தத் திட்டத்தின்கீழ், 1957 மார்ச் 31-ந் தேதிவரை 89,408 வீடுகளைக் கட்டுவதற்காக மொத்தம் ரூ. 25,28,98,808 வழங்கப்பட்டது; இதில் ரூ. 13,02,55,860 கடனாகவும், ரூ. 12,26,42,948 உதவித் தொகையாகவும் வழங்கப்பட்டிருக்கிறது.

பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும் தனிப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கும், 'கார்ப்பரேஷன்'களுக்கும் கடனாகவும், உதவித் தொகையாகவும் அதே காலத்தில் மொத்தம் ரூ. 16,60,56,777 விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், இதற்காக ரூ. 45 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் திட்ட காலத்தில் மொத்தம் 1,50,000 வீடுகள் கட்டி முடிக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்!

இந்த அதிசயத்தைக் கேட்டீர்களா?

ஒரு எழுத்தை மாற்றுவதற்கு 6 ஆண்டுக் காலம்!

புதுடில்லி, மே 5—

திருச்சி மாவட்டத்திலுள்ள கிராமமொன்று 'திருப்பிராய்த் துறை' என்ற பெயருடன் விளங்கி வருகிறது. அதை 'திருப்பாராய்த் துறை' என்று மாற்ற அனுமதிக்க வேண்டும் என்று 1951-ம் ஆண்டில் செப்டம்பர் திங்களில் மத்திய ஆட்சியைக் கேட்டுக்கொள்ளப்பட்டது; மீண்டும் மீண்டும் இது சம்பந்தமாக கடிதப்போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டு வந்துள்ளது. இதற்கான முடிவு கூற அரசாங்கத்திற்கு 6 ஆண்டு காலம் பிடித்துள்ளது.

ஏப்ரல் 12-ந் தேதி வெளியிடப்பட்ட உத்தரவில், மாநில அரசாங்க யோசனைப்படியே பெயரை மாற்றிக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிசயம்-ஆனால் உண்மை!

காரை 'மெதுவாக'ஓட்டிச் செல்வது குற்றமாம்!

நியூயார்க், மே 5—

காரை ஓட்டிச்செல்வது சம்பந்தமாக கன்னடிகாட் சட்டமன்றம் சட்டமொன்று இயற்றியுள்ளது. இந்தச் சட்டப்படி, போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும்வகையில் கார்களை மந்த வேகத்தில் ஓட்டிச் செல்வது குற்றமாகக் கருதப்படுமாம்.

ஆனால், பாதுகாப்புடன் செல்லவும், சட்டத்திற்கு உட்பட்டு நடக்கவும், மற்ற அதிகாரிகளின் சட்டளைப்படி நடக்கவும் மட்டுமே கார்களை மெதுவாக ஓட்டிச் செல்லலாமாம்.

இந்தச் சட்டத்தின்கீழ், ஏற்ற அபராதம் விதிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

செய்த தவறுகளைத் திருத்தி வருகிறாராம்!

ஹாங்காங், மே 5—

சுமார் 2,000 வெளிநாடு விருந்தினருக்கிடையே, சீனாவின் தலைநகரான பீகிங்கில் நடைபெற்ற மே தின விழாவில், சீனப் பிரதமர் சூ-என்-லாய் பேசுகையில், 'தேசிய அபிவிருத்தியில் பல தவறுகள் செய்துள்ளது உண்மையேயாகும்,' என்று ஒப்புக்கொண்டு, இப்போது, தான் அந்தத் தவறுகளைத் திருத்தி வருவதாகக் கூறியுள்ளார்.

மற்ற நாடுகளில் மலர்ந்துள்ள முன்னேற்றத்தைக் கண்டறிந்து அம்முறையில் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள தான் முயன்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பசிபிக்கடலில் இரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல்கள்

பிரிஸ்பேன், மே. 5—

பசிபிக் கடலில் இரஷ்ய நீர் மூழ்கிக் கப்பல்கள் அதிகமாக நடமாடுகின்றனவாம்!

இத்தகவலை அமெரிக்கப் படைகளின் தளபதி வெளியிட்டுள்ளார்.

கடன் தந்து உதவுவதற்கு முன்வருகிறார்கள்

வாஷிங்டன், மே. 5—

இந்தோனேஷியாவுக்கு ஒன்றரை கோடி டாலரும், லிபியா, இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுக்கும் 25 இலட்சம் டாலரும் அமெரிக்க சர்க்கார் கடனாகத் தந்து உதவக்கூடுமாம்.

பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் சட்டபூர்வமான அதிகாரமாற்றம் மே மாத இறுதியில் அல்லது ஜூன் மாதத் துவக்கத்தில் சட்டப்படி ஊர்ஜிதமாகக் கூடுமாம்,

‘அரைகுறை மனித இனத்தை உருவாக்கி இருப்பதில் தனது பொறுப்பை நேருவால் தட்டிக்கழிக்க முடியாது’

‘நேருவின் வருகையை தம் தமிழ் எதிர்ப்புக்கு இலங்கை ஆட்சி பயன்படுத்தக்கூடும்’

‘அந்தச் சூதுக்கு தம்மை உள்ளாக்கிக் கொள்ளக்கூடாது’

இலங்கை பெடரல் கட்சி இந்தியப் பிரதமரை எச்சரிக்கின்றது

கொழும்பு, மே 3—

“தன்னுடைய சனநாயகமற்ற தமிழ் எதிர்ப்பு நடைமுறைகளுக்கு, இந்தியப் பிரதமர் நேருவின் இலங்கை வரவை, இலங்கை அரசாங்கம் சூதாகப் பயன்படுத்தக்கூடும்”

இக்கருத்தைத் தெளிவுபடுத்தி, இலங்கை தமிழ் மக்கள் சார்பில் பேசும் உரிமை கொண்டுள்ள பெடரல் கட்சியின் செயலாளர் டாக்டர் எம். வி. நாகநாதன் அவர்கள், அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

“இந்த அச்சத்தின் காரணமாக, மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ ஜனநாயக முரணான கோட்பாடுகளுக்குத் தம்மைப் பயன்படுத்திக்கொள்ள நேரு இடமளிக்கக்கூடாது என எச்சரிக்கவேண்டிய தாகிறது” என்றும் அவ்வறிக்கையில் காணப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் மொழி, குடிமக்கள் நடைமுறை குறித்து, குடிமக்கள் கோட்பாட்டின் காரணமாக ஏறத்தாழ பத்து இலட்சம் தமிழ் தொழிலாளர்களின் உரிமை பறிக்கப்பட்டிருக்கின்றது என்றும், கடந்த இருபதாண்டு காலமாக அவர்கள் அனைவரும் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வந்திருக்கின்றனர் என்றும், அவர்கள் நாடற்ற நாடோடிகளாக ஆக்கப்பட்டிருப்பதுடன் வாக்குரிமை இழந்து, அடிமைத் தொழிலாளிகள் நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றனர் என்றும், மேற்படி அறிக்கையில் விளக்கப்பட்டிருக்கிறது.

“இப்படி ஒரு அரைகுறையான மனித இனத்தை உருவாக்கி இருப்பதில் தமக்குள்ள பொறுப்பிலிருந்து நேருவால் தப்பித்துக்கொள்ள முடியாது.

“இதற்கு முன்பிருந்த ஆட்சிகளால் நேரு பலமுறை ஏமாற்றப்பட்டிருக்கின்றார்.

1949-ம் ஆண்டுக்குமுன் இலங்கைக்கு வந்துள்ள இந்தியர்களைத் தொடர்ந்து வசிக்க அனுமதிக்கப்படும் என எழுத்து மூலம் கொடுத்திருந்த வாக்குறுதியை மீறி, அவர்கள் வலுக்கட்டாயமாக நாடு கடத்தப்பட்டு வருகின்றனர்.

“இந்தியா—பாகிஸ்தான் மூலம் கொண்டவர்களுக்கும், சிலோன் குடிமக்களுக்கும் ஒரு கூட்டு குடிமக்கள் உரிமை வழங்கப்போவதாகவும் நேரு வாக்களித்திருந்தார். அதுவும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை.

“இந்திய மூலத்தைச்கொண்ட இலங்கையில் வாழ்ந்துவரும் 5 இலட்சம் மக்களுக்கு, இந்தியா—பாகிஸ்தான் குடிமக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் குடிமக்கள் உரிமை வழங்கப்படும் என முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயகா, இலண்டன் மாநாட்டில் நேருவிடம் குறிப்பிட்டிருந்தார். அந்த நம்பிக்கையில், கண்டி மக்களின் அரசியல் உரிமைக்குப் பாதுகாப்புத் தேடும் விதத்தில் இலங்கைவாழ் இந்திய மூலத்தினருக்கு தற்காலிகமாகத் தனித் தொகுதி முறையையும், சட்டசபையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இடம் ஒதுக்கலையும் நேரு வற்புறுத்தினர். இந்த நம்பிக்கை செயலுருவம் பெறவில்லை. தனித் தொகுதியில் உள்ளாக்கப்பட்டவர்களுக்காகத் தேர்தலும் நடைபெறவில்லை.”

குறிப்பு:— சுவிட்சர்லாந்தில் உள்ள அரசியல் அமைப்புப்படி இலங்கையிலும் ஏற்படவேண்டும் என்பதும், இலங்கையில் வடக்கு-கிழக்கு மாநிலங்களில் வாழும் தமிழருக்கு சுயஆட்சி உரிமை ஏற்படவேண்டுமென்பதும் இலங்கை பெடரல் கட்சியின் நோக்கமாகும்.

ஆகஸ்டுத் திங்களில், கட்சியின் கோரிக்கையை வலியுறுத்தும் நோக்கத்துடன் பொதுமக்கள் போராட்டமும் நடைபெறக் கூடும். இதற்கான துவக்க வேலைகளில் பெடரல் கட்சி ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

101-உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை சட்டசபையில், தமிழ்ப் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 14-உறுப்பினர்களில் பெடரல் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒன்பது பேர் அங்கம் வகித்திருக்கின்றனர்.

மகளிர் மீட்சி இல்லம்

சென்னை சர்க்கார் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி

புதுடில்லி, மே 5—

வாழ்வில் நெறி தவறிய பெண்களுக்கும், சீர்திருத்த நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து விடுதலையடைந்த பெண்களுக்கும் இல்லங்கள்—விடுதிகள் நிறுவும் திட்டத்தை சென்னை சர்க்கார் அமுல் செய்யுமென்றும், இத்திட்டத்திற்கு இந்திய சர்க்கார் நிதி உதவி தர இணங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது.

முன்னரே சென்னையில் நடைபெற்றுவந்த இரு இல்லங்களை சர்க்கார் மேற்கொண்டுவிட்டதாகவும், சர்க்கார் நிர்வாகத்தில் அவை செயல்படத் தொடங்கி விட்டதாகவும் தெரிகிறது.

‘ஒவ்வொரு மாநிலத்திற்கு ரூ. 5 வீதம் மொத்தம் 80 இல்லங்கள் ரூ. 10½ கோடி செலவில் ஏற்படுத்தப்படும்; நாடு முழுமையிலுமாக மொத்தம் 420 விடுதிகள் நிறுவப்படும்,’ என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே 17 இல்லங்களுக்கும் 33 விடுதிகளுக்கும் மத்திய சர்க்கார் நிதி உதவி அனுமதித்திருக்கிறது.

ஏற்காடு தொகுதியில்

தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டங்கள்

மே

12, 13: ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ். எம். அண்ணாமலை

18: க. அன்பழகன்

19, 20: மு. கருணாநிதி

21, 22: ப. உ. சண்முகம், சந்தானம்

32, 24: அண்ணா, ஏ. கோவிந்தசாமி, க. செல்வராசு, சி. நடராசன்

25: இரா. நெடுஞ்செழியன்

கூட்டம் நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இலங்கையிலும் பர்மாவிலும் ‘நாடற்றவர்கள்’ கூட்டம்பெருகுவது நல்வாழ்வுக்கு ஏற்றதா?

‘அநீதியின் காரணமாக ஆறரை இலட்சம் பேர் திக்கற்றவர்களாவதா?

‘நிர்ப்பந்தத்தால் இந்தியாவுக்கு ஓடிவருவோருக்கு வாழ்வு கிடைக்குமா?’

இந்தியப் பேரரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

“இலங்கை பற்றியவரை, சர்க்காரிடம் தமிழர்கள் நம்பிக்கை இழக்க, இந்தியரின் குடிஉரிமை மனுக்கள் தக்க காரணமின்றி பெருவாரியாக நிராகரிக்கப்படுவதும் ஒரு காரணமாயிருக்கக் கூடும்.

“இந்த அநீதியின் காரணமாக மொத்தம் சுமார் ஆறரை இலட்சம் இந்தியர் திக்கற்றவர்களாகலாம். ஏற்கனவே அத்தீவிலிருந்து பல இந்தியர் அங்குள்ள நிர்ப்பந்தங்கள் காரணமாக இந்தியாவுக்கு ஓடிவந்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் புனர்வாழ்வுக்கு பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்குக் கிடைத்திருப்பது போன்ற வசதிகள் அளிக்கப்பட வேண்டுமெனக்கோருவது முற்றிலும் நியாயமேயாகும்”

என்று, ‘நீதி மறுப்பின் விளைவு’ என்ற தலைப்பில் 3-5-57-ந் தேதிய ‘சுதேசமித்திரன்’ தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் எழுதியிருப்பதாவது:—

“இலங்கையில் ஒரு தனித் தமிழ் ராஜ்யம் ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் அங்கு ஒரு இயக்கம் ஆரம்பமாகவிருக்கிறது. இதற்கான பொறுப்பை மேற்கொண்டுள்ள சமஷ்டிக் கட்சி, சட்ட மறுப்பு இயக்கத்துக்குத் தொண்டர்களைத் திரட்ட ஆரம்பித்துவிட்டது. இதுதான் அங்குள்ள பெருவாரியான தமிழர்களைக் கொண்ட கட்சி. அத்தீவில் வட-கிழக்கு பாகங்களில் தமிழர்கள் மிக்கப் பெரும்பாலானவர்கள். எனவே, அப்பிராந்தியங்களில் இப்புதுக் கிளர்ச்சி பேராதரவு பெறுவது நிச்சயம்.

“இவ்வியக்கத்தின் நோக்கம் நிறைவேறி, அத்தீவு பிளவுபடுவது அதன் எதிர்கால வாழ்வுக்கு உகந்ததுதானா என்பது பற்றி நாம் தற்போது விவாதிக்க வேண்டியதில்லை.

“தமிழர் இத்தகைய ஒரு இயக்கத்தைத் துவக்க துணிந்ததேன் என்பதே தற்போது இலங்கை சர்க்கார் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம். அவர்களிடம் தமிழர் வர வர நம்பிக்கை இழந்து வந்திருப்பதன் விளைவே இது.

“இந்[illegible]க்கான காரணங்கள்[illegible] முக்கியமானவற்றி[illegible] பிரச்சினையில் சர்க்காரின் யோசனையற்ற நடைமுறையும் ஒன்று. நெடுங்காலமாக, சிங்களத்துக்குச் சமமான ஒரு அரசாங்கமொழியாக இருந்து வந்த தமிழ், அந்த ஸ்தானத்திலிருந்து இறக்கப்பட்டுவிட்டது. தமிழர், தங்கள் கல்விச்சாலைகளிலும், தங்கள் பெரும்பாலோராயுள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்திலும் தமிழைக் கையாளுவதில் தங்களுக்கு ஆட்சேபணையில்லையென்று சர்க்கார் கூறலாம். ஆனால், இவ்வளவு தூரம் செல்வோர், இன்னும் ஒரு படிசென்று தமிழ் முன்போல் அரசாங்க மொழியாக நீடிக்க ஏன் விடக்கூடாது? எப்படியாவது தங்களையும், தங்கள் மொழியையும் சிறுமைப்படுத்துவதுதான் அதிகாரிகள் எண்ணமா என்று தமிழர் சந்தேகிப்பதில் வியப்புக்கிடமில்லை.

“மொழி, மதம் போன்ற விஷயங்களில் யோசனையற்ற நடவடிக்கைகளால் மிகவும் விபரீதமான விளைவுகள் விளையக்கூடும். பாகிஸ்தானில் ஆரம்பத்திலிருந்தே மேற்குப் பகுதிக்கும் கிழக்குப் பகுதிக்கும் தகராறு முற்றியதற்குக் காரணம், மொழிப் பிரச்சினையில் மேற்குப் பகுதியிலுள்ள அரசியல்வாதிகள் காட்டிவந்த எதேச்சாதிகாரப் போக்குதான். பின்னர் அதோடு வேறு காரணங்களும் சேர்ந்து இப்போது கிழக்குப் பாகிஸ்தானின் சுய ஆட்சிக் கோரிக்கையில் போய் முடிந்திருக்கிறது.

“இலங்கையைப்போல் பர்மாவிலும் இந்தியர் குடி உரிமை பெறுவதில் சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களில் ஒரு சிலரது மனுக்கள்தான் ஏற்கப்பட்டிருக்கின்றன. மற்றவர்களில் பெருவாரியானவர்கள் நாடற்றவர்களாகிவிடுவரோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

“ஏனெனில், இந்தியக் குடி உரிமைச் சட்டப்படி பர்மியக் குடி உரிமைக்கு மனுச் செய்துகொண்டிருப்பவர்கள் இந்தியாவுக்குப் பிரயாண அனுமதிச் சீட்டு பெறுவதற்குரியவர்களல்லர்.

“இலங்கையிலோ, பர்மாவிலோ நாடற்றவர்கள் கூட்டம் பெருகவிடுவது அவற்றின் நல்வாழ்வுக்கு ஒத்ததன்று.

“உண்மையில், அவர்களுக்கு உரிய அந்தஸ்தை அளித்து மேலும் அவர்களது சேவையைப் பயன்படுத்திக்கொள்ள வழி காண்பதே நியாயமும், விவேகமும் ஆகும்.

“இந்த உணர்வு அவ்விரு நாடுகளிலும் ஏற்பட இந்திய சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுகிறோம்.”

‘உண்மை விளம்பிய தலைவரை இழந்துவிட்டோம்’

குமாரசாமி இராசாவின் மறைவுக்கு சட்டசபையில் அனுதாபம்

க. அன்பழகன் பேச்சு

சென்னை, மே 4—

“நாணயமும் நேர்மையும், மேலான ஒழுக்கமும் மிக்க தென்னாட்டுத் தலைவர்களில் முக்கியமானவர் திரு. குமாரசாமி இராசா அவர்கள். அவரது மறைவு, அவர் சார்ந்திருந்த கட்சிக்கு மட்டுமின்றி நாட்டுக்கே பெரும் இழப்பாகும்.

“உண்மையை ஒளிக்காமல் கூறியவர் என்ற முறையில், குமாரசாமி இராசா அவர்களின் மறைவு எங்களுக்கெல்லாம் பெரும் வருத்தத்தைத் தந்தது.

“அவர் மறைவதற்கு சில நாட்களுக்கு முன்பு ஒரிசா கவர்னராயிருந்த காலத்தில், ‘தென்னாடு டில்லி சர்க்காரால் புறக்கணிக்கப் படுகிறது’ என்ற உண்மையை வெளியிட்டார்.

“தொடர்ந்து அவர், அந்த உண்மை குறித்து விளக்குவார்—நாட்டு மக்களுக்கு அந்த விளக்கம் பெரும்பயன் தரும்’ என்று எண்ணிக் கொண்டிருந்தோம்; ஆனால், துரதிருஷ்டவசமாக அவர், அதற்குள் நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்டார்.

“அத்தகைய ஒரு தென்னாட்டுத் தலைவரை நாம் இழந்தது நமக்குப் பெரும் வருத்தத்தைத் தரக்கூடியதாகும். அவரது மறைவுக்கு, நான் தி. மு. கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்”

என்று, தோழர் க. அன்பழகன் அவர்கள், சென்னை சட்டசபையில், கனம் மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று கொண்டுவந்த குமாரசாமி இராசா அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகையில் குறிப்பிட்டார்.

மற்றும் தோழர்கள் கல்யாணசுந்தரம் (கம்), வி. கே. இராமசாமி முதலியார் (கா. சீ. க.) முதலானோரும் பேசினர்.

சபைத் தலைவரும் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு சபையை அன்றுக்கு அஞ்சலி செலுத்தும்வகையில் அரை மணி நேரம் ஒத்திவைத்தார்.

பொதுசுகாதார பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், சென்னை, கேரளம், பீகார் ஆகிய மாநிலங்களில் பரிசோதனைச் சாலைகள் ஏற்படுத்த இந்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

சென்னை மாநிலத்தில் இரண்டு இடங்களில் இந்த சோதனைச் சாலை ஏற்படுத்தப்படும்; ஒன்று நெல்லை மாவட்டத்திலும், மற்றொன்று வ. ஆ. மாவட்டத்திலும் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு கிராம அதிகாரிகள் துயரம்

சர்க்காருக்கு வேண்டுகோளும் குறிப்பும்

திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கக் கூட்டத்தில், கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி, குறிப்புகளையும் அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளனர்.

1. பவானி தாலுகாவில் கி.-உ.-க்களுக்குச் சம்பளம் பிடித்ததை மீண்டும் தரவேண்டும்.

2. வந்தவாசி தாலுகாவில் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ள 5 கி. உ.-க்கள் பேரிலும், விழுப்புரம் தாலுகாவில் 32 கி. உ.-க்கள் பேரிலும் ஏற்படுத்தியுள்ள 'குற்றக் குறிப்பை' வாபஸ் பெற வேண்டும்.

3. ஆத்தூர் தாலுகாவில் மூன்று கி. உ.-க்கள்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும், மற்றும் சில இடங்களில் கி. உ.-க்கள் சிப்பந்திகள்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை வாபஸ் பெறவேண்டும்.

4. கி. உ.-க்களுக்கும், கிராமச் சிப்பந்திகளுக்கும் குறைந்த பட்சம் மாதம் ரூ. 31 விதம் 10 நாட்களுக்குள் கிராக்கிப்படி அளிக்கப்படாவிடில் 15—5—57 முதல் வேலை நிறுத்தம் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கம் அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ள குறிப்பில், கிராம அதிகாரிகள், சிப்பந்திகளுக்கு ஊதிய உயர்வு கோரியும், அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படும் கிராக்கிப்படியை கொடுக்கும்படியும் கோரி வந்துள்ளதை அரசாங்கம் கவனிப்பதாகத் தட்டிக் கழித்து வருவதைக் கண்டித்தும், நிதி நிலைமை சரியில்லை என்பது நியாயமானதல்லவென்றும், உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளதற்கு ஏற்றவாறு குறைந்தது ரூ. 31 கிராக்கிப்படியாகத் தர வேண்டுமென்றும், இதை அரசாங்கம் நிறைவேற்ற மறுப்பது கி. உ.-க்களை வேலை செய்ய முடியாத நிலைக்குக் கொண்டு செல்வதாகுமென்றும், தற்போது வேலைகள் அதிகரித்துள்ளது என்றும், கி. உ.-க்கள் கோரிக்கைகளைப் புறக்கணிப்பது அழகல்லவென்றும், உடனே நிவாரணமளிக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உயர்வும் - தாழ்வும்!

கல்கத்தா, மே 5—

டாக்டர் திரிகுணசென் என்பவர் கல்கத்தா மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நகரின் முதல் குடிமகனை மேயரின் சொந்த உபயோகத்திற்கு இதுவரை எல்லா மேயர்களுக்கும் அளிக்கப்பட்டுவந்ததைப்போல, இவருக்கும் ரூ. 25,000 செலவில் வாங்கப்பட்ட ஒரு புதிய மோட்டார் தரப்பட்டதாம்; ஆனால் அதை அவர் ஏற்க மறுத்துவிட்டார்.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் தனக்கு எந்த வேலையும் கிடைக்காதபோது, தான் ஒரு வாடகை மோட்டாரை ஓட்டிப் பிழைத்துவந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

4-வது அகில இந்தியக் கைத்தறி வார விழா

34, பாந்தியான் ரோடு, எழும்பூர், சென்னை-8.

பொதுமக்களுக்கு தினந்தோறும் மாலை 4மணிக்கு திறந்துவைக்கப்படும்

7—5—1957 மாலை 6 மணி: பொதுக்கூட்டம்

தலைவர் :

திரு. எம். ஏ. மாணிக்கவேலு பி.ஏ., பி.எல்., ரெவின்யூ அமைச்சர்

பேசுவோர் : திரு. கி. வா. ஜகந்நாதன், ஆசிரியர் 'கலைமகள்'

திரு. எம். கே. சாமி, ஆசிரியர் 'கைத்தறி'

புலவர் சி. என். குழந்தை அம்மாள் எம்.எல்.ஏ.,

இரவு 7மணி: இன்னிசை--இசைஅரசு M.M. தண்டபாணிதேசிகர்

பிரவேசக் கட்டணம் கிடையாது

திராவிடர் கழகத்தின் சாதிப் பெயர் அழிப்புப் போராட்டம்

பல நகரங்களில் அமைதியாக நடைபெற்றது

சென்னை, மே 5—

திராவிடர் கழகத்தின் சாதிப் பெயர் ஒழிப்புப் போராட்டம், இன்று சென்னை—திருவல்லிக்கேணியிலுள்ள சிற்றுண்டிச்சாலையில் பெரியார் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. நகரின் பல இடங்களிலும் நடைபெற்ற இப் 'பிராமணாள்' என்ற சாதிப் பெயர் ஒழிப்புப் போராட்டம் அமைதியாகவே நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

திருச்சியில் 25 திராவிடர் கழகத் தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், நாகையில் 42 தொண்டர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. மற்ற இடங்களில் எதிர்ப்பின்றி அமைதியாகவே நடைபெற்றதாம்.

சென்னை— திருவல்லிக்கேணி, பைகிராப்ட்ஸ் ரோடிலுள்ள ஒரு சிற்றுண்டிச்சாலையில் 'பிராமணாள்' என்று பொறிக்கப்பட்டுள்ள பெயரை அழிக்க பெரியார் அவர்கள் இன்று மாலை 6-15 மணிக்கு வந்தார். விடுதி உரிமையாளர், பெரியார் அவர்கள் அழிப்பதற்கு அனுமதி மறுக்கவே, கழகத் தொண்டர்களை தினமும் மறியல் செய்யும்படி சொல்லிவிட்டு பெரியார் அவர்கள் திரும்பிவிட்டதாகத் தெரியவருகிறது.

★

ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தயங்காதாம்!

மிரட்டலுக்காக சலுகைகள் தர முடியாதாம்!

சென்னை, மே 5—

"தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்த கிராம ஊழியர்களோ அதிகாரிகளோ நேரடி (வேலை நிறுத்த) நடவடிக்கைகளில் இறங்கினால், கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்காது என்பதை சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் தெளிவாக்க அரசாங்கம் விரும்புகிறது. மிரட்டல்களுக்காக அரசாங்கம் சலுகைகள் தர முடியாது. எனவே, கோரிக்கைகளின்மீது ஏற்கனவே தரப்பட்ட வேலைநிறுத்த அறிவிப்புகளைத் திரும்பப் பெறப்பட்டு, கோரிக்கைகளை உரிய முறையில் பரிசீலனை செய்வதற்குத் தக்க சூழ்நிலை ஏற்படும்வரை, கோரிக்கைகளின்மீது பரிசீலனையை மேற்கொள்வதை நிறுத்தி வைப்பதென அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது" என்று, 15-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்யப்போவதாகக் கிராம அதிகாரிகள் சங்கம் முடிவு செய்திருப்பதற்கு எதிராக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கிராமப்புறச் சேரிகளுக்கு மின்சார ஒளி வசதி

சென்னை, மே 5—

கிராமப் பஞ்சாயத்துக்களாலும், மற்ற நிறுவனங்களாலும் விளக்கு வசதி செய்துதர முடியாத கிராமப்புறச் சேரிகளுக்கு, மின்சார ஒளி வசதி அளிக்கும் திட்டமொன்றை சென்னை அரசாங்கம் தயாரித்துள்ளது.

அரிசன நல்வாழ்வு நிதியிலிருந்து இதற்கான செலவு செய்யப்படுமாம்.

இந்தத் தகவலை அமைச்சர் பக்தவத்சலம் வெளியிட்டுள்ளார்.

'உதயசூரியன் அறிவியல் மன்றம்' திறப்பு விழா

7—5—57 மாலை 6 மணிக்கு வண்ணை—சிங்காரத் தோட்டம், 4-வது தெருவில் அமைந்துள்ள 'உதயசூரியன் அறிவியல் மன்றம்' திறப்பு விழா தோழர் டி.பி. சுந்தரம் தலைமையில் நடைபெறும்; தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் மன்றத்தைத் திறந்து வைத்துப் பேசுவார்.

கள்ளக்குறிச்சி வட்ட—கிராம உத்தியோகஸ்தர்கள் பேரவைக் கூட்டம்

7—5—57 மாலை 2 மணிக்கு கள்ளக்குறிச்சியில் மேற்படி பேரவைக் கூட்டம் நடைபெறும்.

தங்கப்பழத்தைக் கைது செய்ய 'வாரண்டு'

கே. வி. கே. சாமி கொலை வழக்கு அப்பீல்

தூத்துக்குடி தோழர் கே. வி. கே. சாமி கொலை வழக்கில் ஆர். எஸ். தங்கப்பழம், மற்றும் மூவரை விடுதலைசெய்துள்ளதை எதிர்த்து சென்னை சர்க்கார் சார்பில், உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்து கொள்ளப்பட்டது.

நீதிபதிகள் பஷீர் அகமது சையதும், இராமசாமி கவுண்டரும் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதித்தனர்.

விடுதலையான தங்கப்பழம் உட்பட எல்லோரையும் மீண்டும் கைது செய்ய நீதிபதிகள், 'வாரண்டு' பிறப்பிக்க உத்திரவிட்டனர்.

சத்தியவாணிமுத்து உரிமைக் குரல்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தொகை கிடைக்கவில்லை. இதற்குக் காரணம், இந்த மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது என்பதுதான். நாங்கள், 'இந்த நாடு மத்திய ஆட்சியின் பிடிப்பிலிருந்து விடுபட வேண்டும்' என்று கூறுகிறோம்.

சேரிகள் அதிகரிக்கும் விசித்திர நிலை!

"சேரி அபிவிருத்தி பற்றி சர்க்கார், பல திட்டங்களை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், 1954-ம் ஆண்டில் சென்னை நகரில் மட்டும் 231 சேரிகள் இருந்ததாகவும், 1956-ம் ஆண்டில் 311 சேரிகள் இருப்பதாகவும்—அதாவது 80 சேரிகள் அதிகரித்திருப்பதாகவும் சர்க்கார் கணக்குத் தந்திருக்கிறது. சேரி அபிவிருத்திக்கென இலட்சக் கணக்கில் ரூபாய் செலவிட்டிருப்பதாகக் கூறப்பட்டிருந்தாலும், சேரிகளின் எண்ணிக்கை ஓர்புறம் அதிகரித்துக்கொண்டே செல்வதைக் காண்கிறோம்.

"எனது பெரம்பூர் தொகுதியில் மட்டும் 191 சேரிகள் இருக்கின்றன. வாழை மாநகர், கொல்லாபுரிநகர், மாச்சின்புரம் இவை எல்லாம் சேரிப்புறங்கள். இங்கு, ஒரு சேரி அபிவிருத்தி செய்யப்படுகையில், மற்றொருபுறம் புதிய சேரிகள் தோன்றிக்கொண்டு வந்தால் என்ன பலன்?

ஒரு வார்த்தைகூட இல்லையே!

"அடுத்தபடியாக, தொழிலாளருக்காக—அவர்களின் நன்மைக்காக இந்த சர்க்கார் எதும் செய்யவில்லை. அவர்களைப் பற்றி, ஒருவார்த்தைகூட கவர்னரின் உரையில் இல்லை.

மீனவர் நிலை குறித்து கவலை காணோம்!

"குறிப்பும் சிறப்பமாக, மீன்பிடித் தொழில் மூலம் சர்க்காருக்கு ஏராளமான வருவாய் கிடைத்தும், அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களைக் குறித்து, சர்க்கார் எதும் கவலைப்படவில்லை. என்பது வருந்தற்குரியதாகும்.

கிணற்றுத் தவளைகள் என்ற நிலை மாற...!

"இந்த நாட்டில் தாய்மார்கள் வெறும் கிணற்றுத் தவளைகளாக உள்ள நிலைமாறி, அவர்களும் ஆண்மக்களோடு எல்லாத் துறைகளிலும், ஒன்றிப் பணியாற்றும் வகையில், அவர்களின் முன்னேற்றத்தில் சர்க்கார் தனிக் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

மு. கருணாநிதி குரலோசை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சிதைந்துபோன செங்கோட்டையிலிருந்து!

கன்னியாகுமரியை வரவேற்றுள்ளார் கவர்னர்; ஆனால் நாம், கன்னியாகுமரியை, தேவிகுளத்திலிருந்தோ, பீர்மேட்டிலிருந்தோ வரவேற்கவில்லை; சிதைந்துபோன செங்கோட்டையில் நின்றுகொண்டுதான வரவேற்றோம் என்பதை மறந்துவிடுவதற்கில்லை!

விவசாயிகளுக்குப் பலனா கிடைத்தது?

"நியாய வாரச் சட்டங்கள் விவசாயிகளுக்குப் பலன் பல தந்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், அந்தச் சட்டங்களின் பெயரால் இன்று விவசாயிகள் பெருந்தொல்லைகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

"எனது குளித்தலைத் தொகுதியில், இந்தச் சட்டங்களின் காரணமாக நங்கபுரம், திம்மாச்சிபுரம் போன்ற பகுதி விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

"இந்தப் பகுதிகளில் கையேறு வாரம், மாட்டேறு வாரம் என்று இருவகையான விவசாயமுண்டு; இந்த இருவகையான விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள்—பாட்டாளி வர்க்கத்தினர், இந்தச் சட்டங்களின் மூலம் பயனடையவில்லை என்பது மட்டுமல்ல — பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

களத்துமேட்டில் காவலாளிகள்

"இவர்களுக்கு நியாய வாரம் கிடையாது; இவர்கள், சட்டப்படி நியாயவாரம் பெற முடியாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துவிட்டதால், இந்த விவசாயப் பெருமக்கள், முத்து முத்தாய்ச் சிந்திய வியர்வையால், மணி மணியாய்க் குவிந்த நெல்மணிகள் இன்று களத்துமேட்டிலே காவலாளிகளின் மேற்பார்வையிலிருக்கிறது. இந்தப்பெருமக்களின் வயிற்றிலோ, பசிப் புயல் குமுறிக்கொண்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிரான அப்பீல் இனி ஜூலையில் தான் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமாம். இதற்கிடையில், விவசாயிகளின் நிலை என்ன? அவர்களுக்கு சர்க்கார் எந்த வகையில் இந்த இடைக்காலத்தில் வாழ்வளிக்கப் போகிறது?

இந்த விலையேற்றத்திற்கு காரணம் என்ன?

"மேலும், உணவுப் பண்டங்களின் விலை விஷம்போல ஏறிக்கிடக்கிறது; இன்னும் இறங்கியபாடில்லை. இந்த விலை ஏற்றத்திற்குக் காரணம் என்ன?

"வடநாட்டில் சோளப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதாம்! அதற்காக, சோளத்திற்குப் பதிலாகத் தர கோதுமையும் இல்லாத காரணத்தால், நமது அண்டை மாநிலமான ஆந்திரத்திலிருந்து அரிசி அங்கே கொண்டு செல்லப்பட்டுவிடுகிறது. இதன் விளைவு நமது பற்றாக்குறைக்கு ஆந்திர அரிசி கிடைக்கவில்லை. இங்கு விலைகள் விஷம்போல் ஏறுகிறது.

"இதை எல்லாம் கேட்கமுடியாதவர்களாய் நமது சர்க்கார் ஊமையர்களாயுள்ளனர்."

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் சுற்றுப்பயணம்

★

மே

7 : கல்லாரப்பட்டி.
8 : குஞ்சியம்பாறை
9 : சோபனபுரம்
10 : காலை—சாவடிக்குப்பம் (சீர்காழி)
மாலை — பெருந்தோட்டம்
11 : காலை—சுவாமிமலை
மாலை—கொற்கை (குடந்தை)
12 : திருப்பூர்
13 : வெள்ளக்கோயில்

சி. பி. சிற்றரசு சுற்றுப்பயணம்

★

மே

16, 17 : கன்னிவாடி, தாராபுரம் பகுதிகள்
18 : ஆலங்குடி (வ)திருக்காம் புலியூர்
19 : நாச்சிகுளம்
25 : உ. அம்மாபட்டி
26 : மதுரை
27 : சித்தாய் மூர்
28 : திருப்பத்தூர் (தஞ்சை)

கழகக் கூட்டங்கள்

★

கீழவீரசோழபுரம் :

மன்மதசாமி கோவில் திடலில்
8—5—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : கு. தம்பிதுரை
பேசுவோர் :
கே. ஏ. மதியழகன்
பொ. தருமன்
ம. கோ. மணி

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.